# මැතිවරණ දෙපාර්තමේන්තුව
## தேர்தல்கள் திணைக்களம்


පොදු කාර්යාලය 2868441-3
பொது அலுவலகம்

මැතිවරණ කොමසාරිස් 2868444
தேர்தல்கள் ஆணையாளர்

අතිරේක මැතිවරණ කොමසාරිස් 2868446
மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர்
ෆැක්ස් (பாக்ஸ்) 2868367

මැතිවරණ මහලේකම් කාර්යාලය,
තැ.පෙ. 2,
රාජගිරිය . 10107
தேர்தல்கள் செயலகம்,
த. பெ. 2,
இராஜகிரிய. 10107


---

මගේ අංකය : PE/2010/04
ඔබේ අංකය :
දිනය : 2010.02.13

**ජනාධිපති ලේකම්,**
**අමාත්‍ය මණ්ඩල ලේකම්,**
**අග්‍රාමාත්‍ය ලේකම්,**
**සියළුම අමාත්‍යාංශ ලේකම්වරුන්,**
**රාජ්‍ය සේවා කොමිෂන් සභාවේ ලේකම්,**
**ජාතික පොලිස් කොමිෂන් සභාවේ ලේකම්,**
**සියළුම පළාත් සභා ප්‍රධාන ලේකම්වරුන්,**
**සියළුම දිස්ත්‍රික් ලේකම්වරුන්,**
**සියළුම පළාත් ආණ්ඩුකාර ලේකම්වරුන්,**
**සියළුම පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභා ලේකම්වරුන්.**

**පාර්ලිමේන්තු මහ මැතිවරණය - 2010.04.08**
***<u>රජයේ සම්පත් අනිසි ලෙස භාවිතා කිරීම</u>***

අතිගරු ජනාධිපතිතුමා විසින් 2010.02.09 වැනි දින මධ්‍යම රාත්‍රියේ සිට පාර්ලිමේන්තුව විසුරුවා හැර ඇත. අභිනව පාර්ලිමේන්තුවේ මන්ත්‍රීවරුන් තෝරා පත් කර ගැනීම සඳහා ඡන්ද විමසීම 2010.04.08 වැනි දින පැවැත්වේ. මේ සම්බන්ධයෙන් ජනාධිපතිගේ ප්‍රකාශනය අංක - 1640/16 හා 2010.02.09 දිනැති අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කර ඇත.

02. දහ හත් (17) වැනි ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සංශෝධනයේ 104ඒ වැනි ව්‍යවස්ථාව අනුව 'ඡන්ද විමසීමක් පැවැත්වෙන කාල සීමාව' යනුවෙන් අදහස් කරනුයේ ජනාධිපති විසින් ප්‍රකාශනය කළ දින සිට ඡන්ද ප්‍රතිඵල නිකුත් කරනු ලබන දිනය දක්වා වූ කාල සීමාව වේ. රජයේ සම්පත් අනිසි ලෙස භාවිතා කිරීමට අදාළව මෙම ලිපියෙන් ඉදිරිපත් කරන සීමාවන් මෙම ඡන්ද විමසීම් කාලසීමාව තුළ බලපැවැත්වෙනු ඇත.

03. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 104 ආ (4) අ වැනි ව්‍යවස්ථාව අනුව, තරඟ කරනු ලබන යම් ඡන්ද අපේක්ෂකයෙකු හෝ යම් දේශපාලන පක්ෂයක් හෝ ස්වාධීන කණ්ඩායමක් හෝ තෝරා පත් කර ගැනීම ප්‍රවර්ධනය කිරීමේ හෝ වළක්වාලීමේ හෝ කාර්යය සඳහා රජයට හෝ යම් රාජ්‍ය සංස්ථාවකට හෝ අයත් යම් නිශ්චල හෝ චංචල හෝ දේපල භාවිතා කිරීම ඉහත කී 'ඡන්ද විමසීමේ කාලසීමාව' තුළදී තහනම් කිරීමට, මැතිවරණ කොමිෂන් සභාවට බලය පැවරී ඇත. 103 වැනි ව්‍යවස්ථාව සහ 27 (2) වගන්තිය අනුව මැතිවරණ කොමිෂන් සභාව පිහිටුවන තුරු, මැතිවරණ කොමසාරිස්වරයා වෙත මෙම වගකීම පැවරෙනු ඇත. එබැවින්, මෙම පාර්ලිමේන්තු මැතිවරණයේදී ද රාජ්‍ය දේපල අනිසි ලෙස පරිහරණය කිරීම වහාම ක්‍රියාත්මක වන පරිදි අත්හිටුවන ලෙස මෙයින් දන්වා සිටිමි.

04. එම ව්‍යවස්ථාවේ (ආ) උප වගන්තිය යටතේ මැතිවරණ කොමිෂන් සභාව විසින් කරනු ලබන **නියමයන් ක්‍රියාත්මක කිරීමට රජය සතු දේපල භාරව සිටින සියළු තැනැත්තන් බැඳී සිටී. මැතිවරණ ප්‍රචාරණ කටයුතු සඳහා රජය සතු මෝටර් රථ, ජීප් රථ ආදී වාහන සහ හෙලිකොප්ටර් වැනි ගුවන් යානා යොදවා ගන්නා බවට පසුගිය මැතිවරණ අවස්ථාවලදී ද මෙම දෙපාර්තමේන්තුවට පැමිණිලි ලැබී ඇත. එබැවින් රජයේ වාහන භාරව සිටින සියළු නිලධාරීන් එම වාහන යම් දේශපාලන පක්ෂයක, ස්වාධීන කණ්ඩායමක හෝ අපේක්ෂකයකුගේ ඡන්ද ප්‍රචාරක කටයුතු සඳහා භාවිතා නොවන ආකාරයට මැතිවරණ කාලසීමාව තුළ වාහන සංචිතය නඩත්තු කිරීම විශේෂ අවධානයකින් යුතුව සිදු කළ යුතු බව අවධාරණය කරමි.** නිලධාරීන්ට වෙන් කර ඇති (assigned vehicles) රජය සතු වාහන සහ කුලියට ලබාගෙන රාජකාරී කටයුතු සඳහා යොදවන වාහන ද මීට ඇතුලත් වන බව සැලකිය යුතුය.

05. **රජයේ කාර්යාල ගොඩනැගිලි, රජය සතු වෙනත් ගොඩනැගිලි සහ සංචාරක නිවාස ආදිය ද රජයේ සම්පත් වන බැවින් මැතිවරණ ප්‍රචාරක කටයුතු සඳහා යෙදී සිටින පුද්ගලයින්ට රජය සතු සංචාරක නිවාස, තානායම්, නිවාඩු නිකේතන ආදිය ද නොමිලේ ලබා දීම සම්පූර්ණයෙන්ම තහනම් බව ද සැලකිය යුතුය.**

06. රාජ්‍ය සම්පතක් වන රජයේ සහ සංස්ථාවල සියළුම තරා තිරම්වල නිලධාරීන් සහ සේවකයින් 'ඡන්ද විමසීම් කාලසීමාව' තුළ දී ස්ථාන මාරු කිරීම දේශපාලන පක්ෂ, ස්වාධීන කණ්ඩායම් සහ අපේක්ෂකයින් ගේ විවේචනයට හේතු වනු ඇත. එමෙන්ම දේශපාලන හේතූන් මත මාරුවීම් කරනු ලබන බවට බොහෝවිට චෝදනා නැගීමට ද අවකාශ ඇත. මෙවැනි පැමිණිලි මීට පෙර මැතිවරණ පැවැත්වූ අවස්ථාවලදී ද ලැබී ඇත. එම නිසා, මෙම ඡන්ද විමසීමට අදාළ ඡන්ද ප්‍රතිපල නිකුත් කරන තුරු නිලධාරීන් ස්ථාන මාරු කිරීමෙන් වැලකී සිටීම ප්‍රඥාගෝචර වේ. උසස් තනතුරු දරන නිලධාරීන් සම්බන්ධයෙන් මෙම කරුණ බොහෝ සේ බලපානු ඇත.

07. **එසේම රජයේ හා සංස්ථාවල තනතුරු සඳහා උසස්වීම් ප්‍රදානය කිරීම, නවකයන් බඳවා ගැනීම, බඳවා ගැනීම සඳහා ඉල්ලුම්පත්‍ර කැඳවීම, සම්මුඛ පරීක්ෂණ පැවැත්වීම ආදිය ද මෙම කාල සීමාව තුළට වැටී ඇත්නම් කල් දැමිය යුතුය. මෙම කරුණ ගැන සියළුම අමාත්‍යාංශ ලේකම්වරුන්ගේ විශේෂ අවධානයට යොමු විය යුතුය.**

08. ඡන්ද විමසීම් කාලය තුළ රජයේ මුදල් වැයකරමින් පවත්වනු ලබන විවිධ **ආකාරයේ ජංගම සේවාවන්, ප්‍රදර්ශන, විවෘත කිරීම් වැනි උත්සව ආදිය දේශපාලන අංශ වලට සම්බන්ධ පුද්ගලයින්ගේ සහභාගීත්වයෙන් සිදුකෙරෙන අතර එම අවස්ථාවලදී මැතිවරණයට අදාළව නොයෙකුත් මතිමතාන්තර ඔවුන් වෙතින් ප්‍රකාශ වීමට ඉඩ ඇත.** එබඳු ප්‍රකාශයන් මැතිවරණය සඳහා ඉදිරිපත් වන අපේක්ෂකයින්ගේ අපේක්ෂකත්වයට ද අනිසි ලෙස බලපානු ඇත. තවද මෙබඳු උත්සව අවස්ථාවන් සංවිධානය කිරීම පැවරෙන්නේ අමාත්‍යාංශ වල, දෙපාර්තමේන්තුවල හෝ දිස්ත්‍රික්ක වල සේවය කරනු ලබන රජයේ නිලධාරීන් වෙත බැවින් මැතිවරණ සමයේදී විවිධ මැතිවරණ රාජකාරී පැවරෙන එම නිලධාරීන් මෙබඳු උත්සව සංවිධානය කිරීම ද කිසිසේත් සුදුසු නොවේ. එබැවින් මෙම මැතිවරණ කාලය තුළ එබඳු උත්සව අවස්ථා පැවැත්වීමෙන් වැලකී සිටීම ගැන ඔබේ කාරුණික සැලකිල්ල යොමු කරන මෙන් දන්වමි.

09. මෙම ඡන්ද විමසීම් වලදී මන්ත්‍රීවරුන් තෝරා පත් කර ගැනීම ප්‍රවර්ධනය කිරීමේ හෝ වලක්වාලීමේ කාර්යයන් වෙනුවෙන් රාජ්‍ය දේපල භාවිතා කිරීම වලක්වාලමින් කර ඇති මෙම තහනම තදින්ම අනුගමනය කරන ලෙස ඔබට උපදෙස් දෙමි. තවද, ඔබ යටතේ ඇති සියළුම දෙපාර්තමේන්තු, රාජ්‍ය සංස්ථා හා වෙනත් ආයතන වල ප්‍රධානීන්ට ද මේ පිළිබඳව උපදෙස් දෙන ලෙස ද කරුණාවෙන් දන්වමි.

10. ඡන්ද විමසීමට අදාළ සියළුම නීති බලාත්මක කිරීමට, සුරක්ෂිත කිරීමට මැතිවරණ කොමිෂන් සභාවට / මැතිවරණ කොමසාරිස්වරයාට සහාය දැක්වීම අදාළ නීති බලාත්මක කිරීමට භාරව සිටින සියළුම රජයේ බලධරයන්ගේ කාර්යය විය යුතු බව ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 104ආ(2) ව්‍යවස්ථාවෙහි කර ඇති සඳහන පිළිබඳව ඔබගේ දැඩි අවධානය යොමු කරවනු කැමැත්තෙමි.

11. මෙම චක්‍රලේඛ ලිපියේ සඳහන් කරුණු පිළිබඳව ඔබේ ඇමති මණ්ඩල, අමාත්‍යවරු සහ නියෝජ්‍ය ඇමතිවරුන් සහ කාර්ය මණ්ඩල දැනුවත් කිරීම ද අමාත්‍යාංශ ලේකම්වරයා වෙත පැවරෙනු ඇත.

12. **ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ සඳහන් කරුණු වලට අමතරව, ඔබේ අමාත්‍යාංශයේ/ දෙපාර්තමේන්තුවේ/ ආයතනයේ ප්‍රධාන ගණන් දීමේ/ ගණන් දීමේ නිලධාරී වශයෙන් ද රජය සතු දේපල අනිසි ලෙස පරිහරණය කිරීම වැලැක්වීම ද අදාල නිලධාරීන්ගේ වගකීමක් බව මෙහි ලා සඳහන් කරමි.**

13. මෙම ලිපියට අමුණා ඇති ආකෘතිය සම්පූර්ණ කර ආපසු එවීමෙන් මෙම ලිපිය ලැබුණු බව සහ ඒ අනුව කටයුතු කිරීමට සටහන් කර ගත් බව සනාථ කරන මෙන් කාරුණිකව දන්වමි. තවද ඔබේ ආයතන සතුව ඇති වාහන භාරව කටයුතු කරනු ලබන නිලධාරියා පිළිබඳ විස්තර එහි පහතින් ඇති කොටසේ සඳහන් කර එවන ලෙසද දන්වමි.

**දයානන්ද දිශානායක,**
**මැතිවරණ කොමසාරිස්.**

**පිටපත් -**

1. විගණකාධිපති - දැන ගැනීම සඳහා
2. සියළුම තේරීම්භාර නිලධාරීන් වෙත සහ
3. නියෝජ්‍ය/ජ්‍යෙෂ්ඨ සහකාර /සහකාර මැතිවරණ කොමසාරිස්වරුන් වෙත - දැන ගැනීම සඳහා සහ ඔබ දිස්ත්‍රික්කයේ සියළුම ප්‍රාදේශීය ලේකම්වරුන් සහ නාගරික කොමසාරිස්වරුන්, නගර සභා සහ ප්‍රාදේශීය සභා ලේකම්වරුන් වෙත මෙම ලිපියේ පිටපතක් යැවීම සඳහා

# මැතිවරණ දෙපාර්තමේන්තුව
# தேர்தல்கள் திணைக்களம்

පොදු කාර්යාලය - 2868441-3
பொது அலுவலகம்

මැතිවරණ කොමසාරිස් - 2868444
தேர்தல்கள் ஆணையாளர் ෆැක්ස් தொலைநகல் 2868445

සහකාර කොමසාරිස් (පාලන) 2868448
உதவி ஆணையாளர் (நிருவாகம்) ෆැක්ස් (தொலைநகல்) 2868448

මැතිවරණ මහලේකම් කාර්යාලය,
තැ.පෙ. 2,
රාජගිරිය. 10107
தேர்தல்கள் செயலகம்,
த. பெ. 2,
இராஜகிரிய. 10107


මගේ අංකය :
எனது இல : PE/2010/04

දිනය :
திகதி : 2010.02.13

சனாதிபதியின் செயலாளர், அமைச்சரவைச் செயலாளர்,
பிரதம மந்திரியின் செயலாளர், அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாகாண சபைகளின் பிரதமச் செயலாளர்கள்,
அனைத்து மாவட்டச் செயலாளர்கள், அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,

**பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2010.04.08**
**அரசாங்க வளங்களை முறையற்றவிதத்தில் பயன்படுத்தல்**

அதிமேதகு சனாதிபதியவர்களால் 2010.02.09 ஆந் திகதி நல்லிரவு முதல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. புதிய பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 2010.04.08 ஆந் திகதி நடாத்தப்படும். இதுதொடர்பான சனாதிபதியவர்களின் பிரகடனம் 2010.02.09 ஆந் திகதிய 1640/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

02. பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் 104ஒ ஆம் உறுப்புரைக்கிணங்க, "வாக்கெடுப்பு நடைபெறும் காலக்கெடு" எனப்படுவது சனாதிபதியவர்களின் பிரகடனம் வெளியிடப்பட்ட நாள் முதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் வரையான காலஎல்லையாகும். அரசாங்க வளங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் தொடர்பாக இக்கடித்தின் மூலம் தரப்படும் எல்லைகள் இக்காலக்கெடுவிற்குள் நடைமுறையிலிருக்கும்.

03. அரசியலமைப்பின் 104ஆ (4)அ உறுப்புரைக்கமைய போட்டியிடுகின்ற எவரேனும் ஒரு வேட்பாளரை, ஏதேனுமொரு அரசியற் கட்சியொன்றை அல்லது சுயேச்சைக் குழுவொன்றை தேர்ந்தெடுப்பதை ஊக்குவிக்கும் அல்லது தடுக்கும் நோக்கில் அரசாங்கத்துக்கு அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எவையேனும் அசையாத அல்லது அசையும் ஆதனங்களைப் பயன்படுத்துவதை மேற்குறித்த "வாக்கெடுப்புக் காலக்கெடு" வுக்குள் தடைசெய்ய, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. 103 ஆம் உறுப்புரைக்கும், 27(2)ஆம் பிரிவிற்கும் அமைய தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்படும்வரை தேர்தல்கள் ஆணையாளருக்கு இப்பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. ஆதாலால் இப்பாராளுமன்றத் தேர்தலின் போது அத்தகைய அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்தல் உடனடியாக அமுலாகும் விதத்தில் தடைசெய்யப்படுகின்றது என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

04. அரசியலமைப்பின் (ஆ) உப பிரிவிற்கிணங்க தேர்தல் ஆணைக்குழுவினால் **விடுக்கப்படும் கட்டளைகளை நடைமுறைப்படுத்த அரச சொத்துக்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைவரும் கட்டுப்பட்டுள்ளனர். தேர்தற் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்துக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள் மற்றும் ஹெலிகொப்ரர்கள் போன்ற வானூர்திகளைப் பயன்படுத்துவதாக கடந்த தேர்தற் காலங்களில் இத்திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆதலால், அரச வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் அவ்வாகனங்கள் ஏதேனுமொரு அரசியற் கட்சியின், சுயேச்சைக் குழுவின் வேட்பாளரொருவரின் பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத விதத்தில் தேர்தல் காலக்கெடுவுக்குள் வாகனக் குழாத்தினைப் பேணுவதில் அதிக அக்கறையோடு நடந்துகொள்ள வேண்டுமென்பதனை வலியுறுத்துகின்றேன்.** அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள (assigned vehicles) அரசாங்கத்துக்குச் சொந்தமான வாகனங்களும் வாடகைக்குப் பெற்றுக்கொண்டு கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படும் வாகனங்களும் இதில் அடங்குமென்பதைக் கருத்திற் கொள்ளவும்.

05. **அரசாங்க அலுவலகக் கட்டிடங்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான வேறு கட்டிடங்கள், சுற்றுலா விடுதிகள் என்பனவும் அரசாங்க வளங்களாகக் கணிக்கப்படுதல் வேண்டும். தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்துக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடிவீடுகள், விடுமுறை விடுதிகள் என்பவற்றையும் இலவசமாக வழங்குவதும் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதென்பதை கருத்திற்கொள்ளல் வேண்டும்..**

06. அரசாங்க வளங்களாகக் கருதப்படும் அரச, கூட்டுத்தாபனங்களின் சகல தராதரங்களையும் சேர்ந்த அலுவலர்களதும் ஊழியர்களதும் இடமாற்றங்களை "வாக்கெடுப்புக் காலக்கெடுவுக்குள்" மேற்கொள்ளல், அரசியற் கட்சிகளின், சுயேச்சைக் குழுக்களின், வேட்பாளர்களின் விவாதங்களுக்கு இலக்காகக்கூடிய விடயமொன்றாகும். அதேபோன்று அரசியற் காரணங்களுக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென்ற குற்றச்சாட்டுகள் எழவும் இடமுண்டு. இவ்வாறான முறைப்பாடுகள் இதற்கு முன் நடைபெற்ற தேர்தல்களின்போதும் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே இந்த தேர்தலுக்கான பெறுபேறுகள் வெளியிடப்படும்வரை அலுவலர்களை இடமாற்றம் செய்வதை தவிர்த்துக்கொள்வது சாலச்சிறந்ததாகும். உயர் பதவிகளை வகிக்கும் அலுவலர்கள் தொடர்பாக இவ்விடயம் மிகவும் பொருத்தமாகும்.

07. **அவ்வாறே அரசாங்கத்தில், கூட்டுத்தாபனங்களில் பதவி உயர்வுகளை வழங்குதல், புதியவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பங்கள் கோருதல், நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் என்பன இக்காலக்கெடுவிற்குள் இடம்பெறவிருக்குமாயின் அவற்றை ஒத்திவைத்தல் வேண்டும். இந்த விடயங்கள் பற்றி அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களும் விஷேட கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.**

08. வாக்கெடுப்புக் காலக்கெடுவுக்குள் அரசாங்க நிதியைப் பயன்படுத்தி **பல்வேறு விதங்களிலான நடமாடும் சேவைகள், கண்காட்சிகள், விழாக்கள் ஆகியன அரசியலோடு தொடர்புடையவர்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, அத்தகைய சந்தர்ப்பங்களில் நடாத்தப்படவுள்ள தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துப்பரிமாறல்களும் அவர்களால் வெளியிடப்பட இடமுண்டு.** அத்தகைய விடயங்கள் தேர்தலில் போட்டியிட முந்வந்துள்ள வேட்பாளர்களின் வேட்பாளர் தன்மைமையைப் பாதிக்கின்றன. அத்தோடு இத்தகைய விழாக்களை ஒழுங்கமைக்கும் பொறுப்பு அமைச்சுக்கள், திணைக்களங்கள் அல்லது மாவட்டங்களில் பணிபுரிகின்ற அலுவலர்களுக்கு சுமத்தப்படுகின்றமையால் தேர்தல் காலங்களில் பல்வேறு தேர்தல் கடமைகள் சுமத்தப்படுகின்ற அவ்வலுவலர்களின் மூலம் இத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்வது எந்த வகையிலும் பொருத்தமானதாகாது. ஆதலால் இத் தேர்தல் காலத்திற்குள் இத்தகைய விழாக்களை ஒழுங்கமைப்பதிலிருந்து தவிர்த்துகொள்வது தொடர்பாக தங்களது மேலான கவனம் ஈர்க்கப்படல் வேண்டுமென அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

09. இந்தத் தேர்தலின்போது எவரேனுமொரு வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவதை ஊக்குவிக்கும் அல்லது தடுக்கும் நடவடிக்கைகளுக்காகப் அரசாங்க ஆதனங்களை பயன்படுத்துவதைத் தடை செய்கின்ற இத்தடை உத்தரவை கடுமையாகப் பின்பற்றுமாறு தங்களுக்கு ஆலோசனை வழங்குகின்றேன். அத்தோடு தங்களுக்குக் கீழே உள்ள அனைத்துத் திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், ஏனைய நிறுவனங்களின் தலைவர்களையும் இது தொடர்பாக அறிவுறுத்துமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றரேன்.

10. வாக்கெடுப்போடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் செயல்படுத்தவும், வலுவூட்டவும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் ஒத்துழைப்பு வழங்குவது குறித்த சட்டங்களை அமுலாக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ள அனைத்து அரச அலுவலர்களினதும் கடமையாகுமென அரசியலமைப்பின் 104ஆ(2) ஆம் உறுப்புரையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளமை தொடர்பாக தங்களது அதிகூடிய கவனம் ஈர்க்கப்படல் வேண்டுமென்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

11. இச்சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தங்களது அமைச்சரவை, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பணியாட்களை அறிவூட்டுவது அமைச்சின் செயலாளரின் பொறுப்பாகும்.

12. அரசியலமைப்பில் காணப்படும் விடயங்களுக்கு மேலதிகமாக தங்கள் அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பிரதான கணக்கெடுக்கும் அலுவலராக, அரசாங்க சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுத்தல் குறிப்பிட்ட அலுவலர்களின் பொறுப்பாகுமென்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

13. இக்கடிதம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாகவும் அதன்படி நடந்தொழுக குறித்து வைத்துக்கொண்டதாகவும் இக்கடிதத்தின் கிழேயுள்ள பகுதியை நிரப்பி அனுப்புவதன் மூலம் உறுதிப்படுத்துமாறும் தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் தங்கள் நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களுக்குப் பொறுப்பாக கடமைகளை மேற்கொள்ளும் அலுவலர்களின் விபரங்களையும் அதன் கீழேயுள்ள பகுதியில் குறிப்பிட்டு அனுப்புமாறும் அறிவிக்கின்றேன்.

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

பிரதிகள் :-

1. கணக்காய்வாளர் நாயகம். அறிந்துகொள்வதற்காக.
2. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும்,
3. பிரதி/ சிரேட்ட உதவி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும்.

அறிந்துகொள்வதற்காகவும், தங்களது மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும், மாநகர ஆணையாளர்களுக்கும், நகர சபை, பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக இக்கடிதத்தின் ஒரு பிரதியை அனுப்பி வைப்பதற்காக.